
அதிர்ஷ்ட வாய்ப்புகளை

# அள்ளித் தரும் ஆறுகால பூஜை



திரு. ராஜீ ஆச்சாரி



இந்த நூல் மனோரீதியான மாற்றங்களை
ஏற்படுத்தி வாழ்க்கையை வளமாக்கும். இந்த
புத்தகத்தை வரிசைப்படி படித்தால் மிகப் பெரிய
உள்மன மாற்றம் ஏற்படும். நீங்கள் மாறினால்,
உங்கள் எதிர்காலம் மாறும். நீங்கள் வளமான
எதிர்காலத்தை அடைய, முன்னோர்களின்
ஆசிர்வாதம் கிடைக்க வாழ்த்துக்கள்.



ஆர்.பி. ஹரி

# வாழ்க்கையை வளம் பெற செய்யும்
## ஆவிகளின் – ஆறு கால பூஜை

கடந்த பத்து வருடங்களாக ஆவிகளை பற்றி ஆராய்ச்சிகள், மூலம் ஏராளமான விஷயங்களை அறிந்து. படிப்படியாக ஒருவரின் முன்னேற்றத்திற்கு ஆவிகளின் துணையை பெற்று...வாழ்க்கையில் அவரவர் விருப்பபடி,

**சாதனைகள் செய்வதற்கும்,**
**பிரச்சனைகள் தீருவதற்கும்,**
**ஏராளமானவர்களுக்கு வழிகாட்டபட்டது.**

இவை அனைத்தும் ஆதாரங்களுடன் நிருபிக்கப்பட்டதன் காரணமாக... பிரபலமான மாத இதழ் (இந்தியன் எகஸ்பிரஸ்)**Star Teller** பத்திரிக்கையின் மூலம் இந்தியா முழுவதும் என் பேட்டியை வெளியிட்ட **Express Star Teller, Executive Editor** **திரு. ஹேமா *மாலினி ரகுநாதன்*** அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்து. *பொம்மை* பத்திரிக்கையின் ஆசிரியர் *திரு. வீரபத்திரன்* அவர்களுக்கு இந்த விஷயத்தில் பலதும் சாதகமாகவே, ஆவிகள் மூலம் நடந்த ஆச்சரியமான சம்பவங்களை பற்றி இலங்கையில் வெளியாகும் பிரபல மாத இதழில் - தொடர் கட்டுரை எழுத ஆரம்பித்தற்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்.



*திரு.C.J. பாஸ்கர்*

இந்த இடத்தில் பிரபல எழுத்தாளர் *மர்ம தேசம், சிதம்பர ரகசியம் புகழ் திரு. இந்திரா செளந்தர்ராஜன்* அவர்களை பற்றி சொல்லியாக வேண்டும். *விஜய் டி.வி. நையாண்டி தர்பார்* மூலமாக வெளியுலகத்திற்கு என்னை அறிமுகபடுத்தியவர் அவர் தான். அவர் மூலம் ஏராளமானவர்கள் தொடர்பு கொண்டு. ஆவிகள் மூலம் நன்மை அடைந்தனர்.

திரு.இந்திரா சௌந்தராஜன் மூலம் எனக்கு அறிமுகமானவர் தான் *திரு.C.J.பாஸ்கர்,* அப்பொழுது *இயக்குநர் சிகரம் திரு.K. பாலசந்தர்* அவர்களின் மின்பிம்பங்களில் - பணியாற்றி வந்தார். அவருக்கு ஆவிகள் மூலம் பலன் கூறப்பட்டு மிக பெரிய அளவிற்கு முன்னேற போகிறீர்கள். குறிப்பிட்ட தேதியில் இருந்து, கார், பங்களா, வசதிகளுடன் ஜொலிக்க போகிறீர்கள் என்று பலன் கூறப்பட்டது - அதன்படியே மின்பிம்பங்களிலிருந்து விலகி, பலன் கூறியபடி அனைவரும் ஆச்சரியப்படும்படி. *சன் டி.வி. சித்தி* சீரியல் மூலம் உலகம் முழுவதும் பிரபலமானவர் *டைரக்டர் திரு.C.J.பாஸ்கர்.*



*1982ம்,* வருடத்தில் *நடிகர்* **S.Vee.***சேகர், மதன்பாப்* இருவரும் என்னை சந்தித்த பொழுது, அவர்களுக்கு கூறப்பட்ட பலன்கள் ஒன்று விடாமல் அனைத்தும் பலித்தது.

அந்த காலகட்டத்தில் - மதன்பாப் ஒரு இசையமைப்பாளராக இருந்த பொழுது, அவர் நடிகராக மாறுவார் என்று பலன் கூறப்பட்டு அப்படியே நிகழ்ந்தது.

சமீபத்தில் *திரு.S.Vee.சேகர்,* அவர்களை சந்தித்த பொழுது, அவர் கூறினார் எத்தனையோ ஜோதிடர்களை நான் பார்த்து இருக்கிறேன், ஆனால் பல வருடங்களுக்கு முன் நீங்கள் கூறிய பலன்கள் ஒன்று விடாமல் பலித்து, இப்பொழுது நீங்கள் குறிப்பிட்டபடி விலையுர்ந்த கார், பங்களா - நாடக நிகழ்ச்சிகளை நடத்தி, புகழுடன் இருக்கிறேன். அந்த காலகட்டத்தில் நான் எதிர்பார்க்காத - ஒரு வாழ்க்கையை பற்றி விரிவாக சொல்லி. இப்பொழுது நான் நீங்கள் குறிப்பிட்ட படியே மிக நல்ல நிலையில் இருப்பது ஆச்சரியமாக உள்ளது என்று கூறினார்.(**S.Vee.***சேகர்* அவர்களின் தந்தையாரும் நான் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் மறைந்து போனார்)



## அதே போல...



ஆ வி க ள் மூ ல ம் - ஆசிர்வதிக்கப்பட்ட நல்வாக்குகளை மலையாள **நடிகை ஷகீலா** அவர்களுக்கு எடுத்து கூறிய பிறகு, சொல்லபட்டபலன்படியே மிக, மிக, ஆச்சர்யப்படும்படி, அசுர வேகத்தில் வளர்ச்சி அடைந்தார்.

கேரளாவில் **மம்மூட்டி, மோகன்லால்** படங்கள் இவர் படத்திற்கு முன்பு தடுமாறியது. இப்படி ஏராளமானவர்கள் பல துறைகளிலும், ஆவிகளின் வாக்கின்படி வெற்றி அடைந்து உள்ளனர்.

## ஆவிகள் மூலமாக கூறப்பட்ட பலன்கள் பலிப்பதற்கு காரணம்?

ஆவிகள் மூலம் கூறப்பட்ட பலன்கள் பலிப்பதற்கு ஆவிகளே- மனோசக்தி மூலம் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதே! **உங்கள் தலையெழுத்து விதி மாறவேண்டுமா? / வளமான வாழ்வை வசீகரீப்பது எப்படி?** போன்ற புத்தகங்களில் கொடுக்கபட்ட சம்பவங்கள் ஆச்சரியமான முறையில் தீர்க்கப்பட்ட பிரச்சனைகள், வாழ்க்கையை மாற்றியமைத்த- மனோசக்தி விஷயங்கள் அனைத்தும்.

**கீழ்கண்ட பூஜை, பிரார்த்னை முறைகள் மூலம் செய்யப்பட்டதே உங்கள் பிரச்சனைகள் தீரவும். தோஷங்கள் விலகவும்,**

எதிர்காலம் பிரகாசமாக முன்னேற்றம் அடையவும், வசதிகள் கூடவும், உங்கள் முன்னோர்களின் ஆவிகள் மூலம்- எதிர்காலம் வளம் பெறவும், மற்ற எல்லா வகையிலும்-உங்கள் எதிர்காலம் வளம் பெற,

**கீழ்கண்ட பூஜைகள் விருப்பமும், நம்பிக்கையும் உள்ளவர்கள் செய்யலாம்.**

# பூஜை விவரங்கள்

*இந்துமதப்படி இவ்வுலகை மூன்று விதமான சக்திகள் இயக்குகின்றன. படைத்தல்-காத்தல்-அழித்தல் எனப்படுவையே அவைகள். இந்த 3 வகையான சக்திகள்.... எல்லா மதத்தினருக்கும் பொருந்த கூடியவையே சக்தியின் பெயரை வேண்டுமானால் அவரவர் மத விருப்பப்படி மாற்றிக் கொள்ளலாம்.*

இந்து மதத்தினர் படைத்தலுக்கு- ***பிரம்மா***, காத்தலுக்கு- **விஷ்ணு**, அழித்தலுக்கு- ***சிவன்*** என்று ஒரு உருவம் கொடுத்தனர்.




**1 நல்லவர்களையும் படைக்கிறார்**
**2 தீயவர்களையும் படைக்கிறார்**




**3 நல்லவர்களையும் காப்பாற்றுகிறார்**
**4 தீயவர்களையும் காப்பாற்றுகிறார்**




**5 நல்லவர்களையும் அழிக்கிறார்**
**6 தீயவர்களையும் அழிக்கிறார்**

ஆக மொத்தம் - 6 **சக்திகளாக** விரிவு அடைகின்றன. இவையே - இந்து கோவில்களில் **ஆறுகால பூஜையாக** செய்யப்படுகிறது.

**ஒரே சக்தியாக-வணங்கும்படிக்கு,**
**ஆறுமுக கடவுளை சின்னமாக வரைந்தனர்,**



செதுக்கினார்கள்,-பூஜித்தார்கள்.

ஆறு படை வீடுகளாக பிரித்தனர்-பிரிந்தன...

இந்து கோவில்களில் விடியற்காலையில் செய்யப்படும் முதல் பூஜையின் காலத்தை **பிரம்ம முகூர்த்தம்** என்று குறிப்பிடுகிறார்கள்.

ஆறாவது பூஜையை - **அர்த்த ஜாமபூஜை** என்று கூறுவார்கள், நடுராத்திரியில் செய்யும் இந்த பூஜையை **மாந்ரீகம்** செய்பவர்கள் முதல் பூஜையாக தேர்ந்தெடுத்து செய்வார்கள்.

அதாவது **வேது பூஜை — தீயசக்திகளை அழித்தல்** என்பதால்.. **பில்லி சூன்ய** பாதிப்புகளை அழிக்கவும், நோய்களை விரட்டவும், தடைகளை நீக்கவும், தீயவர்களை அழிக்கவும், பயன்படுத்தப் பட்டது. **திருப்பதி, திருவண்ணாமலை, பழனி,** போன்ற முக்கிய ஸ்தலங்களில் மட்டுமே, இந்த ஆறாவது பூஜைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது மகாசிவராத்திரி - அன்று மயானங்களில் இந்த **வேது பூஜையை** விசேஷமாக கொண்டாடுவார்கள்.

அதற்கு **மசான கொள்ளை** என்று அழைப்பார்கள்,

இறைவனுக்கு செய்யப்படும் பூஜையை - **பிரம்ம முகூர்த்ததில்** ஆரம்பிப்பார்கள்.

மனிதனுக்கு செய்யபடும் பூஜையை - **அர்த்த ஜாமத்தில்** ஆரம்பிப்பார்கள்.

மதங்களில் கூட, இந்த **பிரம்மா, விஷ்ணு, சிவன்** அம்சம் வெளிப்படுவதை காணலாம்.

**விஷ்ணு,** நல்லவர்களையும் காப்பாற்றுகிறார் என்ற அடிப்படையில் பார்த்தால்...

**"பாவ மன்னிப்பு"** வழங்குவதில் கிருஸ்துவம் ஆர்வம் காட்டுகிறது.

இது விஷ்ணு அம்சத்தை காட்டுகிறது.

திருப்பதியில்-நல்லவர்களும், தீயவர்களும், ஏழுமலையனை-பாட்னர்ஷிப்பில் சேர்த்துக்கொண்டு பாவக்காரியங்களில் சேர்க்கப்பட்ட பணத்தை, பாதியாக உண்டியலில் கொட்டுகிறார்கள்.

**(மிக பெரிய அளவில் சேர்க்கபடும் சொத்துகளுக்கு பின்னால் நிச்சயம் ஒரு பாவ காரியம் இருக்கும்)** ஆக ஆவிகள் மூலம் செய்யபடும்-பூஜை முறைகள் சிவன் அம்சம் பொருந்தியதாகும்.

ஆகையால் தான் இரவு தூங்குவதற்கு முன் பிரார்த்னை செய்யும்படி பூஜை முறைகள் அமைக்கப்பட்டது. அடுத்து,

பிரம்மத்தில்-விஷ்ணுவும், சிவமும் காணப்படும்.

விஷ்ணுவில் - சிவன் அம்சமும்,பிரம்ம அம்சமும் காணப்படும்

இப்படி - பல உட்பிரிவுகளை கணக்கிட்டு,

## இந்த ஆறுகால பூஜையை

**ப்ரம்மனுக்கு – 6 பூஜை**

**சிவனுக்கு – 6 பூஜை**

**விஷ்ணுவிற்க்கு – 6 பூஜை என்று பிரித்து**

**18**



மொத்தமாக **18 பூஜைகளை, 18 சக்திகளாக பிரித்து** வழிபட்டனர்.

இப்படி தான் - **சபரிமலை ஐய்யப்பனின் 18ம் படி ரகஸ்யம்** உருவானது.


(பலருக்கும் தெரியாத ரகஸ்யம்)

**தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் நடந்த யுத்தமான**

**மகாபாரத யுத்தம் :** *18 தினங்கள் நடந்தது*

*18 சைன்யங்களும் மோதின*

**போருக்கு தூண்டுதலான பகவத் கீதை** *18 அத்தியாயங்கள் கொண்டது.*





கிருஸ்துவத்தில் - 666 சைத்தானின் எண்ணாக கருதப்படுகிறது (6+6+6=18)

முஸ்லிம் மதத்தில் - 786 புனித எண்ணாக கருதபடுகிறது




*இதில் வரும்*

7,-பைபிளில் 7ம் நம்பர் பற்றி நிறைய செய்திகள் ஆரம்பத்தில் வருகிறது. ஏசு பிறந்த டிசம்பர் 25-2+5=7 (கிருஸ்மஸ் தினம்)

8 - முஸ்லிம்களுக்கு பிடித்த எண்.

6 - ஆறு கால பூஜை இந்து மதத்தில் முக்கிய அம்சம்.

*இப்படி அனைத்து மதங்களிலும் 6க்கு - ஒரு தனி இடமுண்டு.*

அடுத்து,

*இந்த 18 பூஜையை* - ஆவிகள் மூலம் பலருக்கு செய்து கொடுத்ததில், பலரும் ஆச்சரியபடும்படி முன்னேற்றங்கள் ஏற்பட்டது, கஷ்டங்கள் நீங்கியது. வறுமை நீங்கியது, நல்ல வேலையில் செட்டில் ஆனார்கள், வசதிகள் கூடியது. அந்தஸ்து உயர்ந்தது, வசதியான வீட்டில் பெண் அமைந்தது. திருமணதடை நீங்கியது, துயரம் நீங்கியது, பர்ஸ்னாலிட்டி கூடியது தீயசக்திகளில் இருந்து விடுதலை கிடைத்தது.

*இந்த 18 பூஜையை* - தனிப்பட்ட முறையில் செய்யாமல், குழு,குழுவாக பிரித்து செய்ய வேண்டிய சூழ்நிலை காலத்தின் கட்டாயத்தால் ஏற்பட்டது. ஏராளமானவர்கள்... இதில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்ததால்... பிரச்சனைகளுக்கு எற்றபடி பூஜைகளை பிரித்து செய்து வருகிறோம்.

## 18 பூஜைகளில் – 6 பூஜைகளுக்கு மட்டுமே கட்டணம்

**ஆம்!**

**ஒரு பூஜை என்பது,**

**ஒரு மாத காலகட்டத்தில் செய்ய கூடியதாகும்.**

**18 பூஜைகள் செய்ய 1 1/2 வருடங்கள் ஆகும்.**

**அதில்**

**6 மாத பூஜைக்கு மட்டும் குறைந்த கட்டணம் வசூலிக்கபடுகிறது.**

**1 வருட பூஜை – கூட்டு பிராத்தனையில் சேர்ந்து விடும்**

### இனி ஒரு மாதத்தில் செய்யப்படும் பூஜைகளை பற்றி பார்ப்போம்.

### *ஒரு மாதத்தில் 12 பூஜைகள் செய்யப்படும்*

ஒரு மாதத்தில் 4 வாரங்கள் உள்ளது.

ஒரு வாரத்தில் - *திங்கள், புதன், வெள்ளி,* ஆகிய தினங்களில் பிராத்தனைகள், பூஜைகள் செய்யப்படும்.

ஆக. *திங்கள்,புதன்,வெள்ளி X 4 வாரங்கள் = 12 பூஜைகளாகும் (12 ராசி கட்டங்களை குறிக்கும்)*

*இந்த 12 பூஜைகளும் , பிரார்த்தனைகளும் முற்றிலும் கூட்டு பிரார்த்தனையாக செய்யபடுகிறது.*

(புண்ணியங்கள் தேடி கொள்ள, ஓரளவு வசதியானவர்கள் இதற்கான கட்டணத்தை ஏற்று கொள்கிறார்கள்)

ஆக

1 1/2 **வருட பூஜையில் – (18 மாதங்கள்)**

**ஒரு மாதத்திற்கு 12 பூஜைகள் X 18=?**

**12x18=216 பூஜைகள் கூட்டு பிரார்த்தனையாகும்**

## கட்டணம் செலுத்த வேண்டிய பூஜைகள்

ஒரு மாதத்தில் வரும் ***அமாவாசை, பௌர்ணமி இரண்டு பூஜைகளுக்கு*** மட்டுமே கட்டணம் வசூலிக்கப்பட்டு, ***அமாவாசை, பௌர்ணமி X 6 = 12 பூஜைகள்*** (6 மாதம்) முக்கிய பூஜைகளாக செய்யபடுகிறது. இதற்கு மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மீதம் வரும் 1 வருடத்திற்கு - 24 அமாவாசை பௌர்ணமி பூஜைகள் முற்றிலும் கூட்டு பிரார்த்தனையில் சேர்க்கப்படும்.

ஆக 1 1/2 வருடத்தில்

| | | |
|---|---|---|
| திங்கள்,புதன்,வெள்ளிகள் | = | 216 |
| (1வருட) அமாவாசை பௌர்ணமி | = | 24 |
| மொத்தம் | | 240 |

**மொத்தம் 240 பூஜைகள் கூட்டு பிராத்தனையாகும் இதற்கு கட்டணம் இல்லை**

நீங்கள் கட்டணம் செலுத்த போவது - 12 பூஜைக்கும் மட்டுமே அதாவது 6 மாதத்திற்கு.

அந்த கட்டணமும் வசதி இல்லாதவர்கள்

மாதம் மாதம் தவணை முறையில் செலுத்தலாம்.

***இந்த பூஜையின் முடிவில் ஆவிகளால் எழுதபடும் சக்தி வாய்ந்த தகடுகள் தரப்படும்.***

***இந்த பூஜையில்***

- ஆழ்மனம் சக்தி பெற்று,
- லட்சியத்தை அடைய உதவும்.
- முன்னோர்களின் உதவிகள் கிடைக்கும்.
- குடும்பத்திற்கு பாதுகாப்பு கிடைக்கும். பிரச்சனைகளின் தீவிரம் குறைந்து, அதை சமாளிக்க துணிவை தரும்
- நாகதோஷம், செவ்வாய் தோஷங்கள் நீங்கும்
- திருமண தடை நீங்கும்.

*இந்த பூஜையில் வெற்றி அடைந்து, முன்னேற்றம் அடைந்து, திருப்தி அடைந்தவர்கள். அனைவரின் புகைப்படங்கள் ஆதாரங்களுடன் புத்தகமாக வெளியிட, அனைவரும் தேவையான விவரங்களை தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*




*[ மனம் - அது செம்மையானால்.....*

*மந்திரம் ஜெபிக்க வேண்டாம் ]*

# ஆவிகளால் செய்யப்படும் உள்மனவசியம்

டி.வி. சீரியல் நடிகர் ஒருவர் ஜாதகம் பார்க்க வந்திருந்தார். அவருடைய ஜாதகத்தை அலசி, கடந்த கால நிகழ்ச்சிகளை பற்றி சில விவரங்களை கூறினேன். அனைத்தும் சரியாக இருந்தது. இப்படி ஜாதகத்தை உறுதி செய்து கொண்ட பிறகு, எதிர்காலம் பற்றி சில விவரங்களை கூறி, குரு கிரகத்தின் காலத்தை குறிப்பிட்டு, அதில் அந்த நடிகர் சொந்த வீடு, கார் போன்ற வசதிகளை அடைவார், என்று குறிப்பிட்டேன். பிறகு, இந்த பலனை உறுதி செய்ய, 108 எண்களுக்குள் ஒரு நம்பர் கூறும்படி கேட்டேன்.



அவரும் யோசிக்காமல் பளிச் சென்று 108 என்று கூறினா 108ம் நம்பர் - கடைசி நம்பராகி, குருவின் ராசியாகிய மீனராசியில் வந்ததால்.

குருவிற்கு சொல்லப்பட்ட பலனை மேலும் உறுதி செய்தேன்.

அந்த நடிகருக்கு தெரியாது, 108ம் நம்பர் குருவின் ராசிக்கு சேர்ந்தது என்று... புத்தகத்தை விரித்து காட்டி, உங்கள் நம்ப குருவின் ராசியில் வந்ததை கவனிக்கவும் என்று சொன்னேன் ஆச்சரியப்பட்டார்.

அது எப்படி? நான் ஏதோ ஓர் நம்பர் சொன்னேன் அது கரெக்டாக குரு ராசியில் வந்தது எப்படி? என்று கேட்டார்.

இதற்கு நான் அளித்த விளக்கங்கள் அர்த்தம் வாய்ந்ததாக இருந்தது.

5+5=? எவ்வளவு என்று கேட்டு இருந்தால் உங்களுடைய மூளை, பகுத்தறிவு, வேலை செய்து, 10 என்று விடை அளித்து இருக்கும்.



FUGFTH¬

இங்கு நான் - உங்கள் மூளைக்கு வேலை கொடுக்கவில்லை அதை மிக தந்திரமாக ஏமாற்றி, ***உங்கள் உள்மனதிற்கு இந்த கேள்வியை கேட்டு வைத்தேன்.***

மூளையையும், உள்மனதையும் பிரித்து ஆளும் சூழ்ச்சியின் சிம்பிள் பார்முலா இது என்று கூறி அவரை யோசிக்க வைத்தேன்.

இந்த சின்ன விஷயததில் - ஏதோ ஒரு உண்மையை புரிந்து கொண்டது போல் அவருடைய முகம் பிரகாசமானது.

108க்குள் - ஒரு எண் கூறும்படி நான் கேட்டதும்,

உங்களுடைய உள்மனம் ( Sub consciousness ) ***இந்த புத்தகத்தை நொடியில் ஸ்கேன் செய்து, அதில் குருவிற்கு தரப்பட்ட நம்பரை தேர்ந்தெடுத்து, உங்கள் மூளைக்கு அனுப்பி விட்டது...***

பிறகு - இந்த புத்தகத்தை பிரித்து காட்டும் பொழுது, நீங்கள் சொன்ன நம்பர் இந்த புத்தகத்தில் குருவிற்கு தரப்பட்ட நம்பருடன் பொருத்தியது என்றேன் - வியப்பாக பார்த்தார்.

அது சரி - ***என் உள்மனம் ஏன் குருவின் நம்பரை தேர்ந்தெடுக்க வேண்டும் ?*** என்று ***கேட்டார்.***


உங்கள் உள்மனம் - ***உங்களுக்கு சொந்த வீடு, கார்*** போன்ற வசதிகளை நான் குறிப்பிட்ட காலகட்டத்தில் உங்களுக்கு ஏற்படுத்தி தர தீவிரமாக வேலை செய்து வருகிறது. நான் அந்த காலகட்டத்தை - உங்களுக்கு சுட்டி காட்டியதும்... உங்கள் உள் மனம் என்னுடன் ஒத்து போய்விட்டது. ஆகையால்...நான் கூறும் இந்த பலன்கள் அப்படியே பலிக்க போகிறது என்றேன்.

உங்களுடைய உள்மனம், என்னுடைய உள்மனதுடன் ஒத்து போய் விட்டதால் - நான் கூறிய அனைத்தும் பலிக்க போகிறது.

அதற்கு, அந்த பலன் பலிப்பதற்கு, உங்கள் உள்மனம் இனி தீவிரமாக வேலை செய்ய போகிறது.

உங்கள் உள் மனதிற்கு - நான் வழி காட்டி விட்டேன் இனி, அது உங்களுக்கு வழிகாட்டும் - என் உள்மனம் ஆவிகளின் சக்திவாய்ந்த உள்மனதால் வழிகாட்டபட்டது என்று, கூறி சூஷ்மத்தை புரிய வைக்க முயற்சி செய்து வெற்றி பெற்றேன்.

***பொதுவாக - நம்முடைய உள்மனம் மிகவும் சக்தி வாய்ந்தது. மூளைக்கும், பிரபஞ்ச சக்திக்கும் - இடையே மீடியேட்டராக இருப்பது*** நம்முடைய உள்மனமே. மூளையும், மூளையின் செயல்பாடுகளையும், உள்மனம் என்று சொல்லப்படும் ஆழ்மனதின் செயல்பாடுகளையும் பிரித்து உணர துவங்கினால் - வாழ்க்கையில் மிக வேகமாக சாதனைகள் செய்ய முடியும், நமக்கு வேண்டிய வசதிகளையும் ஆடம்பரமான வாழ்க்கையையும் அடைய முடியும்.



***மேலே கூறப்பட்ட எண்கள் சம்பந்தபட்ட விஷயம் ஒரு சிறிய உதாரணம் மட்டுமே***

நம்முடைய உள்மனதிற்கு, நம்முடைய பிரச்சனைகளை ஒப்படைத்து விட்டு ஹாய்யாக இருந்தால்... நம்முடைய உள்மனம் அந்த பிரச்சினையை தீர்த்து விடும். ஆனால் நம்முடைய மூளை அடிக்கடி பிரச்சனை சம்பந்தமாக சந்தேகமான கேள்விகளை, நொண்டி கேள்விகளை கேட்டு, நச்சரிக்க கூடாது மூளையின் பகுத்தறிவு சமாசாரங்கள் - உள்மனதின் வேலையை தடை செய்யும்.

பிறகு, நான் ஒதுங்கி கொள்கிறேன் நீயே பிரச்சனைய தீர்த்து கொள் என்று கூறி, உள்மனம் மீண்டும் மூளைக்கே பிரச்சினை திருப்பி அனுப்பிவிடும். இது ஆபத்தானது கால போக்கில் - மூளையே எல்லா பிரச்சனைகளையும் கவனிக்க துவங்கி விடும்.

உள்மனம் - அந்த மாபெரும் சக்தி...

***எந்த வேலையையும் செய்யாமல்...***
***உடலை மட்டுமே இயக்கினால்***
***போதும் என்று - இருந்து விடும்.***

அனைத்து மதவழிபாடுகளும், மறைமுகமாக - உள்மனதை இயக்க வழி முறைகளை தான் சொல்லி தருகிறது என்று கொள்ளலாம்.

ஒரு பிரச்சனைய பற்றி மூளை தீவிரமாக சிந்தித்து,

திகைத்து நிற்கும் பொழுது. அந்த பிரச்சனைய பற்றி சிந்திப்பதை உடனே நிறுத்தி விட்டு, வேறு விஷயங்களில் கவனம் செலுத்தினால் இந்த பிரச்சனைய பற்றிய சிந்தனை - உடனே உள்மனதிற்கு சென்று விடும்.

உள்மனம் நமக்கே தெரியாமல் (மூளைக்கு தெரியாமல்) இந்த பிரச்சினையை கையிலெடுத்து தீர்த்து - முன்னேற்றத்தை ஏற்படுத்தி வைக்கும்.

**"*கடவுள் மேல் பாரத்தை போடுவது*"** என்பது இது தான்.எல்லா பிரச்சினைகளையும் ஒதுக்கிவிட்டு,புனித பயணம் மேற் கொள்ளுவதும் - மிக நன்மையை தரும் ஆவிகளின் பரிகார முறைகளும் - இதன் அடிப்படையில் செய்யப்படுவதே ஆகும்.

மூளையை பகுத்தறிவு சமாசாரங்களை கடந்து, உங்களுடைய ஆழ்மனதை இயக்குபடி செய்து, மனித மூளை கணக்கிடுகளை மீறிய வளர்ச்சியை முன்னேற்றத்தை ஏற்படுத்துவதே - ஆவிகளின் உள் மனதின் சக்தியாகும், குறிக்கோளாகும், இதனால் தான்-

எங்களுக்கு ஏராளமான பிரச்சனைகளை தீர்க்க முடிந்தது. சமபவங்கள் அனைத்தும் - பகுத்தறிவுக்கு எட்டாதாகவும். நம்ப முடியாத விஷயங்களாகவும்





தெரிகிறது. பகுத்தறிவு பாசறைகளில் இருந்து, நாத்திகவாதிகள் நான் வெளியிட்ட ஆதாரபூர்வமான சம்பவங்களுக்கு விளக்கம் சொல்ல தெரியாமல் மழுப்பலாகவே பதில் அளிப்பது சந்தோஷமான விஷயமே!

# FOR EVERY ACTION, THERE IS AN EQUAL AND OPPOSITE RE-ACTION

ஒருவர் செய்யும், ஒவ்வொரு செயலுக்கும் - அதற்கு சமமான எதிர் விளைவுகள் உண்டு. விஞ்ஞானம் இக்கருத்தை ஏற்றுக் கொள்கிறது. இந்து மதமும் இதையே வலியறுத்துகிறது.

**Karma & Reincarnatin Theory .**

முற்பிறவியில் செய்த நன்மை, தீமைக்கு ஏற்றபடி, இப்பிறவியில் வாழ்க்கை அமையும் என்பது விதி.

இதன் அடிப்படையில் செயல்படுவதே, சித்தர்களின், மகான்களின், சாந்தி பரிகார முறைகள், பூஜைகள், ஹோமங்கள், சடங்குகள், பிரார்த்தனைகள், தானதர்மங்கள் மற்றும் பல நல்ல காரியங்கள்.

முற்பிறவியில் - கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வரதட்சணை கொடுமை போன்றவற்றை செய்தவர்கள் என்ன தான் பரிகாரங்கள் செய்தாலும், பலன் அடையமுடியாது இதை ஜாதகம் மூலம் அறியலாம்.

*A என்பவர் 1 லட்சம் கடன் வாங்குகிறார்*

*B என்பவர் 5 ஆயிரம் கடன் வாங்குகிறார், பிறகு*

*B என்பவர் 5 ஆயிரத்தை திருப்பி கொடுத்து விட்டு மனநிம்மதி அடைகிறான்*

A என்பவர் 5 ஆயிரத்தை திருப்பி கொடுத்து விட்டு - தொடர்ந்து கடன் பிரச்சனையால் அவதிபடுகிறார். இருவரும் ஒரே விதமாக பணத்தை செலுத்தினாலும் (பரிகாரம் செய்தாலும்) பலன் ஒருவருக்கு மட்டுமே.

முற்பிறவியில், உணவுக்காக விபச்சாரம், காப்பி அடித்து பரீட்சையில் பாஸ் செய்வது, லஞ்சம் கொடுத்து, கொடுத்து, வேலை வாங்கியது போன்ற (மன்னிக்ககூடிய) குற்றங்களை செய்தவர்கள் இப்பிறவியில் கொஞ்சம் கஷ்டப்பட்டாலும் அதற்கான (அபராதம்) பரிகாரங்கள், தான தர்மங்கள் செய்வதன் மூலம், கஷ்டங்களில் இருந்து விடுபடலாம். மனநிம்மதியான வாழ்க்கையும் ஏற்படும்.

இவர்கள் தகுந்த பரிகாரங்கள் செய்தால் உடனடி நிவாரணமும்




மகிழ்ச்சியான வாழ்க்கையும் அடைவார்கள்.

முற்பிறவியில் மனதளவில் தீயஎண்ணங்கள், சிந்தனைகளில் மூழ்கி தவறு செய்ய முடியாத சூழலில் வாழ்ந்தவர்கள், அதாவது மாற்றான் தோட்டத்து மாம்பழத்தை பறித்து சாப்பிட நினைத்த பொழுது, தோட்டக்காரனை கண்டதும், மனதை மாற்றி கொண்டதுபோல, தவறு செய்யமுடியாத சூழலில் வாழ்ந்தவர்கள். குடும்ப மரியாதையுடன் வளர்க்கப்பட்டவர்கள். (மனைவியை விவாகரத்து செய்தால் குடும்ப மானம் போகும் என்று விவாகரத்து போன்ற தவறுகளை செய்யாதவர்கள்)

இப்படி மனதளவில் பாவம் செய்தவர்கள் (இவர்களால் யாரும் பாதித்து இருக்க மாட்டார்கள்) இப்பிறவியில் - மிக நல்ல வசதியுடன் வாழ்வார்கள். இவர்கள் பரிகாரம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. பரிகாரம் செய்தால், மேலும் பல மடங்கு முன்னேற்றம் அடைவார்கள்.

இதை தவிர முற்பிறவியில் நற்சிந்தனை, நற்காரியங்களில் ஈடுபட்டவர்கள், இப்பிறவியில் மகான்களாகவும், கோடிஸ்வரர்களாகவும், பிரபல சினிமா ஸ்டார்களாகவும், நாட்டை ஆளும் வாய்ப்பு உள்ளவர்களாகவும், விளங்குவார்கள்.

இவர்கள் பரிகாரம் செய்ய தேவையில்லை, இவர்கள் மற்றவர்களின் பிரச்சனைகளை பரிகாரம் செய்து தீர்த்துக் கொடுப்பார்கள்.

## சாந்தி, பரிகாரங்கள் எப்பொழுது பலிதமாகும்?


"*ஹார்ட் ஆப்பிரேஷனுக்காக*" மிக பெரிய தனியார் மருத்துவமனையில் இரு நபர்கள் அட்மிட் ஆனார்கள். ஒருவருக்கு ஜாதகப்படி நல்ல நேரம் ஆரம்பித்து விட்டது. ஆனால் ஜாதகப்படி மற்றவர்க்கோ தீய நேரம் ஆரம்பித்து விட்டது. ஆப்பிரேஷன் சக்ஸஸ் ஆனாலும் இரண்டுநாளில் மரணமடைந்தார்.

இதனால்...

வைத்தியத்தை (பரிகாரத்தை) குறை சொல்லி ஒதுக்க முடியுமா? முதலாமவர்க்கு அதே வைத்தியத்தை செய்யாவிடில் அவரும் போய் சேர்ந்து இருப்பாரே.. ஆக செய்யப்படும் பரிகாரம் பலிதமாகுமா? ஆகாதா? என்பதை ஆராய திறமையான ஜோதிடரால் மட்டுமே முடியும் மேலும் பூர்வ புண்ணிய பலனால் மட்டுமே பரிகாரங்கள் பலிதமாகும்.



## திருஷ்டி பரிகாரம்



திருஷ்டம் என்றால் - கண்கள்

கண்களால் பார்க்க கூடிய பரிகார முறைகளை - திருஷ்டி பரிகாரம் என்று அழைக்கிறோம். தலைவலியா? அனாசின் மாத்திரை சாப்பிடுவது. தாகமா? ஜீஸ்,குளிர்ந்த நீர் சாப்பிடுவது. போர் அடிக்கிறதா? சினிமா, பீச்சு, பார்க் என்று போய் ஜாலியாக இருப்பது.

இவைகள் எல்லாம் - திருஷ்டி பரிகாரங்கள்.

இவைகளை நாம் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறோம்.

(இதிலும் முற்பிறவி செய்த பாவங்களால் - திருஷ்டி பரிகாரம் தோல்வி அடைவதும் உண்டு) உதாரணம்.

இதயத்தில் சிறிய ஓட்டை - தனியார் மருத்துவமனையில் பல லட்சம் செலவு செய்தும், இதய அறுவை சிகிச்சை தோல்வி அடைந்து ஆயுள் முடிந்த கதையும் உண்டு.



# அதிர்ஷ்ட பரிகாரம்

(அ+திருஷ்டம்) அதிருஷ்டம் என்றால் - கண்களால் பார்க்க முடியாத என்று பொருள், அதிர்ஷ்ட பரிகார முறைகள் - என்றால் கண்களால் பார்க்க முடியாத பரிகார முறைகள் என்று அர்த்தமாகும், எவ்வளவு உழைத்தும் முன்னுக்கு வரமுடியவில்லை, திருமணம், நாள்தள்ளிக் கொண்டே போகிறது, வீட்டிற்கு வந்தால் மூதேவி பிடித்தது போல் உள்ளது, காரணமே இல்லாமல் பல பிரச்சனைகள்.

சரியாக திட்டமிட்டு செயல்பட்டும் தோல்விமேல், தோல்வி. இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்கு காரணம்?

(கண்களுக்கு) திருஷ்டிக்கு புலப்படாத சில... குறைபாடுகளே! இவைகளை - முற்பிறவி வினைகளுக்கு ஏற்றபடி - **ஒரு சில சாந்தி பரிகார முறைகளை** செய்வதன் மூலம் பிரச்சனைகளை தவிர்த்து - வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பது விதி.

(இதிலும் முற்பிறவி பலனால் பாதிப்புகள் ஏற்படும், தோல்வியும் ஏற்படும் காரணம்? சம்மந்தபட்டவர்கள் கொலை, கொள்ளை போன்ற பாவ செயலை முற்பிறவியில் செய்து இருப்பார்கள்) அடுத்து, கொடூரமான செயல்களை செய்பவர்களும், தெய்வீகமான நற்காரியங்களை செய்பவர்களும், மக்கள் தொகையில் குறைந்த சதவிகிதம் கொண்டவர்களாகவும்,

***மன்னிக்ககூடிய, திருத்திக் கொள்ளக்கூடிய தவறுகளை செய்பவர்கள்தான், அதிகபட்ச சதவிகிதத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.***

*இவர்கள் திருஷ்டி பரிகாரம் மூலம் - பல காரியங்களில் தோல்வி அடைந்தாலும், அதிர்ஷ்ட பரிகாரங்கள் மூலம் 100 சதவிகிதம், வெற்றியையும், வசதிகளையும், முன்னேற்றங்களையும் அடையலாம். ஜாதகங்கள் மூலம் முற்பிறவியில் செய்த பாவங்களை சீர்தூக்கி பார்த்தே ஆகவேண்டும்.*

**R.P. Hari**